கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு நாட்களில் அந்த நல்ல காரியம் நடக்கும் என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் ஒரு சிறிய திருத்தம். ஒருவேளை 'டைப்' செய்யும் போது தவறாக தட்டச்சு செய்திருக்கலாம் என்று கருதுகிறேன். அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். இரண்டு சமையல் அறைகளையும் சேர்த்து 14 அறைகள் என்றுதான் நான் கேள்வி கேட்டிருந்தேன். இப்போது கேள்வியில் 74 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை 14 என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு சீக்கிரம் மாணவர்கள் சேர்கிறார்களோ, அவ்வளவு சீக்கிரமாக அதற்கு நல்ல காலம் வந்துசேரும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசின் சார்பில் ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல் ஏற்படுத்துகின்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அதற்காக அவர்கள் இடம் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். இந்த ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டலுக்காக இந்த 12 அறைகளில் சில அறைகள் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அது நிச்சயமாக இப்பொழுது சாத்தியமில்லை.

வட சென்னை மீன்பிடித் துறைமுகம்.

124—(*வினா எண். 12494) திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னையில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ளதா? மாநில அரசின் நிர்வாகத்தில் உள்ளதா?

(ஆ) இந்த மீன்பிடி துறைமுகம் சிறிய படகுகளுக்காகவா அல்லது மீன்பிடி கப்பல்களுக்காகவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே(அ) வட சென்னையில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகத்தின் நிர்வாகத்தை மீன்பிடித் துறைமுக நிர்வாகக்குழு மூலமாக சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் நிர்வகிக்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

(ஆ) சென்னை மீன்பிடித் துறைமுகம் 500 மீன்பிடி விசைப் படகுகளுக்கும், 50 மீன்பிடி நாவாய்களுக்கும் தங்குதள வசதி அமைக்கும் பொருட்டு கட்டப்பட்டுள்ளது.

1987 நவம்பர் 16]

(முற்பகல் 10-40)

திரு. எஸ். வேணுகோபால் : தலைவரவர்களே, இந்த மீன் பிடித் துறைமுகத்தின் நுழைவாயிலை அடிக்கடி மண் மூடிவிடுகிறது. நிரந்தரமாக மண் மூடாமல் தடுக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தத் துறைமுகத்தின் நுழைவாயிலில் சில நேரங்களில் மண் மூடிக் காணப்படுவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள் ; நானும் பார்த்திருக்கிறேன். நானும் அவர்களும் சேர்ந்தே அந்த இடத்தை பார்வையிட்டிருக்கிறோம் அங்கே மண் மேடிடுவதை நிரந்தரமாகப் போக்க வழி தெரியவில்லை. கடலுக்கு அடியிலிருந்து மண் வந்து சேருகிறது. ஒரு சீசனில் மண் வந்து சேர்ந்தால் இன்னொரு சீசனில் திரும்பப் போய் விடுகிறது என்று சொல்கிறார்கள். இன்னொரு கருத்தும் சொல்லப்படுகிறது. இந்தத் துறைமுகத்தின் நுழைவாயிலை கடலுக்கு உள்ளே கட்டிவிட்டதால் அங்கே மண் வந்து சேருகிறது. மண் அரிப்பும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நிரந்தரமாக, மண் வந்து சேராமல் இருக்க துறைமுகப் பொறுப்புக்கழகம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து மத்திய துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு எழுதியிருக்கிறோம்.

திரு. எஸ். வேணுகோபால் : தலைவரவர்களே, இந்த மீன் பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதுபற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது. மத்திய அரசும் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்து கொண்டிருக்கிறது. மண்ணை அப்புறப்படுத்த சில கோடி ரூபாய்களை — 5 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன் — இயந்திரம் வாங்குவதற்கு கொடுத்து, இயந்திரங்களை வரவழைத்துக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், மத்திய அரசு இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கருதுகிறேன்.

திருத்தணி மருத்துவமனையில் விபத்துப் பிரிவு.

125—(*வினா 13217) திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணியில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனையில் விபத்துப் பிரிவு எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு திருத்தணி அரசு மருத்துவமனையில் 29–6–1983 முதல் செயல்பட்டு வருகிறது.